# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 24 வெள்ளிக்கிழமை 07.06.2024 கதிர் 224



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் களமிறங்குவார் சுயாதீன வேட்பாளராக அவர் போட்டியிடுவது உறுதியாம்!

## ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தகவல்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுயாதீன வேட்பாளராகப் போட்டியிடுவது உறுதி!, என ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டை தன்னால் அபிவிருத்தி செய்ய இயலும் என நிரூபித்துக் காட்டியுள்ள ரணில் விக்ரமசிங்கவே, நாட்டிற்கு காணப்படும் ஒரே தீர்வு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதியின் வேலைத் திட்டங்கள் குறித்து நாட்டு மக்கள் தற்போது சாதகமாகப் பேசுவதைத் தம்மால் அவதானிக்க முடிவதாகவும் ஆசு மாரசிங்க குறிப்பிட்டார்.

ஆகவே, ஜனாதிபதித் தேர்தலில், சுயாதீன வேட்பாளராகக் களமிறங்கவுள்ள ரணில் விக்ரமசிங்கவிற்கு, அனைவரும் தமது ஆதரவை வழங்க வேண்டும் என, ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் ஆசு மாரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். (04)



# மொட்டுக் கட்சியினருடனான உறவை முறித்தால் ஐ.தே.க.வுடன் கூட்டணி குறித்துப் பேச்சு நடத்தலாம்!

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. நளின் பண்டார தெரிவிப்பு



ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடனான உறவை முறித்துக்கொண்டால் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சு நடத்தலாம் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது–

“எம்மை இணைத்துக்கொள்வதற்குரிய தேவைப்பாடு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கலாம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் திட்டம் எமக்கு இல்லை. நாட்டில் பிரதான அரசியல் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியாகும். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பயணிக்கும் எந்த தேவைப்பாடும் எமக்குக் கிடையாது.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் தொடர்பில் இருந்த பிரச்சினை காரணமாகவே வெளியேறி நாம் சஜித் பிரேமதாஸ தலைமையில் தனிக்கட்சி அமைத்தோம். வெற்றியை நோக்கி எமது கட்சி பயணித்துக்கொண்டிருக்கின்றது. எம்முடன் கூட்டணி அமைப்பதற்கு பல கட்சிகளும் முன்வந்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடனான உறவை முறித்துக்கொண்டு சஜித் பிரேமதாஸ தலைமையில் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் முன்வந்தால் அது பற்றி பேச்சு நடத்தலாம்.” – என்றார். (05)

# வெளிநாட்டில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருவோர் கிராமப்புற இளைஞர்களை இலக்கு வைத்து மோசடி

## மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை



வெளிநாடுகளில் யாழ்ப்பாணம் இருந்து வருவோர், கிராமப்புற இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி மோசடிகளில் ஈடுபட்டு வரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன, என்று யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளும், நுழைவிசைவு மோசடிகளும் அதிகரித்து வருகின்றன. அதிலும், வெளிநாடுகளில் இருந்து வருவோரே இத்தகைய மோசடியில் அதிகம் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் கிராமப்புற இளைஞர்களை இலக்கு வைத்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து 30 தொடக்கம் 40 இலட்சம் ரூபா வரையிலான பண மோசடிகளில் ஈடுபடுகின்றனர்.

அவர்களின் ஏமாற்று நாடகத்தை அறியாத அப்பாவி இளைஞர்கள் போலி வாக்குறுதிகளை நம்பி பணத்தை இழக்கின்றனர். இது தொடர்பான ஏராளமான முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனவே, இந்த வெளிநாட்டு நுழைவிசைவு மோசடிகள் தொடர்பில் அவதானமாகவும், விழிப்பாகவும் இருப்பது அவசியம்” - என்றார். (05)

# 5 மாதங்களில் 25,220 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்! பருவமழை காலத்தில் மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது

## டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் சமரவீர எச்சரிக்கை



இந்த வருடத்தின் (2024) கடந்த 5 மாதங்களில், நாட்டில் 25,220 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 9 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும், அதற்கமைய 9190 பேர் மேல் மாகாணத்தில் டெங்குவினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் பருவமழை காலத்தில் நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதும் 93,874 இடங்களை ஆய்வு செய்துள்ளோம். இதில் நுளம்புகள் பெருகக்கூடிய 28,310 பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், நுளம்பு குடம்பிகள் உள்ள 4,890 இடங்களும் கண்டறியப்பட்டுள்ளன. பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஒவ்வொரு 5

2➤

# தமிழ் பேசும் மக்களின் ஆதரவு சஜித்துக்கே

## வெகுவிரைவில் மெகா கூட்டணி மலரும் என்கிறார் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி.



தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கே என்றும், வெகுவிரைவில் மெகா கூட்டணி மலரும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு.

2➤

# ஐ.எம்.எப். நிதி உதவி கிடைக்க ஜனாதிபதி ரணிலே காரணம்

## ரவி கூறுகின்றார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்பித் தான் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி உதவி களை வழங்குகின்றது என்பதை நாட்டிலுள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இலங்கையின் தற்போதைய நிலைமையில் நாட்டை ஆளக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அவர் ஆட்சியில் தொடர வேண்டும். அவர் இல்லையேல் மீண்டும் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடையும். மீண்டும் ‘அரகலய’ போராட்டம் வெடிக்கும். எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை சகல தரப்பினரும் இணைந்து வெற்றியடையச் செய்ய வேண்டும்.

அரகலய போராட்டத்தின் விளைவாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அவர் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும். அப்போது தான் நாடு முன்னேறிச் செல்லும். சர்வதேசமும் எமது நாட்டுக்கு உதவிகளை வழங்கும்.” - என்றார். (05)


# சீரற்ற காலநிலையினால் மீன்களின் விலை அதிகரிப்பு

கடந்த இரண்டு வாரங்களாக சீரற்ற காலநிலை காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்துள்ளதால் மீன்களின் விலை இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக காலி மீன்பிடி துறைமுக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மீன் பிடித்தல் குறைவடைந்தமையினால், நுகர்வோருக்கு எட்டாத அளவிற்கு மீன்களின் விலை உயர்ந்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொருளாதாரச் சிக்கல்களால் மீனவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்தே கடலுக்கு செல்கின்றனர். கடல் சீற்றமுற்றிருப்பதால் பிடிக்கப்படும் மீன்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. நுகர்வோர் வாங்க முடியாத அளவுக்கு மீன்களின் விலை உயர்ந்துள்ளது. உண்மையில் மீனவர்களால் இதற்கு எதுவும் செய்ய முடியாது.

மீன்பிடிப் படகொன்று கடலுக்குச் சென்று வர ஒரு தடவைக்கு ரூபா.20-25 லட்சம் செலவாகும். இந்த செலவை ஈடுகட்ட குறைந்த பட்சம் மூவாயிரம் முதல் நான்காயிரம் கிலோ மீன்களை பிடிக்க வேண்டும். மக்களுக்கு குறைந்த விலையில் மீன்களை வழங்குவதாயின் இதில் கடற்தொழில் கூட்டுத்தாபனம் தலையிட வேண்டும். ஆனால் அவர்களோ தற்போதுள்ள குளிர்பதன கிடங்குகளை விற்பதிலேயே ஆர்வமாக உள்ளனர். (ரென-17)

# ஓரங்கட்டப்பட்டுள்ள ரத்தன தேரர் புதிய கூட்டணி அமைக்க முயற்சி



விமல் வீரவன்ச, திலித் ஜயவீர மற்றும் சிங்கள தேசியவாதிகளின் பங்கேற்புடன் உதயமாகியுள்ள சர்வஜன அதிகாரம் என்னும் அரசியல் கூட்டணியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் ஓரங்கட்டப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

அவரை இந்தக் கூட்டணியில் இணைக்கக்கூடாது எனச் சில தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரமே இவ்வாறு ஓரங்கட்டப்பட்டுள்ளார் என அறியமுடிகின்றது.

இதனால் புதிய தரப்புகளை இணைத்துக்கொண்டு கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் ரத்தன தேரர் ஈடுபட்டுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (05)

# ரயில் சாரதிகள் பணிப்பகிஷ்கரிப்பால் 32 ரயில் சேவைகள் இன்று காலை ரத்து

ரயில் சாரதிகளின் பணிப்புறக்கணிப்பு காரணமாக இன்று காலை மாத்திரம் 32 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று ரயில் திணைக்களத்தின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இன்று மாலையில் இரத்துச் செய்யப்பட்ட ரயில்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில் என்சின் சாரதிகள் நேற்று நள்ளிரவு முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு வழங்குவதில் ஏற்பட்ட தாமதம், ஆட்சேர்ப்பு தாமதம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தொழில் நடவடிக்கையில் அவர்கள் இறங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

5 ரயில் நிலையங்களில் இரண்டின் சாரதிகள் மாத்திரமே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர் எனவும்,



இதன் காரணமாக மின்சார ரயில் இயங்காது எனவும் லோகோமோட்டிவ் ஒப்பரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் சேனாநாயக்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், 84 ரயில் சாரதிகளின் பதவி உயர்வு பிரச்சினையின் அடிப்படையில் அந்தச் சாரதிகளே இந்தத் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்னர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (05)

## தமிழ் பேசும் மக்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்குப் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர். இவர்களில் கள்வர்கள் அல்லாதவரை நாம் இணைத்துக்கொள்வோம்.

இந்த நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித்துக்கே. பல சிங்களக் கட்சிகளும் சஜித்துக்கே ஆதரவு. எனவே, இவை அனைத்தும் இணைந்து பலமான அணி உருவாகும்.

இன்னும் மூன்று பூரணை (போயா) தினங்கள் முடிந்த பின்னர் சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதியாக இருப்பார். இது உறுதி” - என்றார். (05)

## 5 மாதங்களில் 25,220 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலையிலும் தலா ஒரு நுளம்புக் குடம்பிகள் பரவியுள்ள பகுதிகள் இருப்பதும் கண்டறியப்பட்டது எனவும் பணிப்பளார் மேலும் தெரிவித்துள்ளார்.







உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மிகவும் பழைய தேசிய அடையாள அட்டைகளுக்கு இனிமேல் கடவுச்சீட்டு வழங்கப்பட மாட்டாது!

## குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் அறிவிப்பு

சில தசாப்தங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் குறித்த நபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத நிலையில் உள்ள காரணத்தினால் அத்தகையவர்களுக்கு எவ்விதத்திலும் கடவுச்சீட்டை வழங்காதிருக்க குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தீர்மானித்துள்ளார்.

அதன்படி, அத்தகைய அடையாளம் காண முடியாத புகைப்படங்கள், எண்கள் மற்றும் எழுத்துக்களை கொண்ட தேசிய அடையாள அட்டையையுடைய நபர்கள் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் தமது தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்குமாறும் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பதாரரின் விண்ணப்பப் படிவம், ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் வண்ணப் புகைப்படம், பழைய தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் ஆகியன கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் தாம் சமர்ப்பிக்கும் அண்மைய வண்ணப் புகைப்படமானது அவர்களின் பழைய தேசிய அடையாள அட்டையின் படி, விண்ணப்பதாரரை அடையாளம் காண முடியாத அளவிலான மாற்றங்களுடன் இருப்பதனாலேயே இவ்வாறான சான்றுகள் தேவைப் படுவதாகவும் குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே உள்ள முறையின் படி ஒரு கடவுச்சீட்டானது பத்து வருடங்களுக்கு செல்லுபடியாவதாகும். எனினும், எதிர்காலத்தில் குடிவரவு குடியகல்வு முறைகளை நவீனமயமாக்கும் போது காலாவதியான கடவுச்சீட்டுகளை புதுப்பிக்கையில், விண்ணப்பப் படிவத்தை மாத்திரம் பெற்று அனுமதிப்பத்திரங்களை வகையில் எல்லாமே மாற்றியமைக்கப்படும் எனவும் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-19)

## வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்திற்கு புதிய ஸ்மார்ட் கணினி ஆய்வு கூடம் திறப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட நாவிதன்வெளி வேப்பையடி கலைமகள் வித்யாலயத்தில் புதிய ஸ்மார்ட் கணனி ஆய்வு கூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் கே.தியாகராஜா தலைமையில் இன்று நடைபெற்றது.

இலங்கை Citizens Development Business Finance நிறுவனம், வசதி குறைந்த பாடசாலை மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுத்து வரும் வேலைத் திட்டத்தின் கீழ் 40 இலட்சம் ரூபா செலவில் மாணவர்களுக்கான இந்த கணினி ஆய்வு கூடம் கையளிக்கப்பட்டது.

இதில் குறித்த நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மகேஷ் நாணயக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டு கணினி ஆய்வு கூடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ஏ.சி.என். நிலோபா, பிரதிக் கல்விப் பணிப்பாளரும் நாவிதன்வெளி கோட்டக்கல்வி பணிப்பாளருமான பி.பரமதயாளன், பிரதி கல்வி பணிப்பாளர்களான ஏ.எம். சியாத், என்.எம். நாஸிர் அலி, வேப்பையடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ரணவீர உட்பட கல்வி அதிகாரிகள், சி டி பி நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பாடசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## பாட்டாளிபுரம் பூஞ்சோலையாள் பத்திரகாளி அம்பாள் வருடாந்த வேள்வியும் கலை விழாவும் நூல் வெளியீடும்



(ஹஸ்பர் ஏ.எச் )

மூதூர் கிழக்கு பாட்டாளிபுரம் அருள் மிகு அகம் பூஞ்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வேள்வியும் கலைவிழாவும் நூல் வெளியீடும் நேற்று (6) இடம் பெற்றன.

நேற்றுக் காலை சுப நேரத்தில் மடைப்பெட்டி அருள்மிகு பாட்டாளிபுரம் விநாயகர் ஆலயத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி எடுத்துவரப்பட்டது.

அதன்பின்னர் விசேட அபிசேக, அலங்காரப் பூசைகள் அருள்மிகு அகம் பூஞ்சோலை ஸ்ரீபத்திரகாளி அம்பாளுக்கு நடைபெற்றது .

கலை இலக்கிய விழாவில் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். மாலை நிகழ்வில் ஊடக கலை இலக்கிய ஆன்மீக செயற்பாட்டாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். ஊடகத்துறையில் அரசரெத்தினம் அச்சுதன் கௌரவிக்கப்பட்டார்.

ஆலயத்தின் பிரதான செயற்பாட்டாளர் பொ. சற்சிவானந்தம் தலைமையில் ஆலயத்தின் பூஞ்சோலையாள் வரலாற்று நூல் வெளியீடும் இடம்பெற்றது. பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இன்று அதிகாலை தீமிதிப்பு இடம்பெற்று பொங்கல் விசேட பூசை நிகழ்வுகள் நிறைவடைந்தன.

## மண்முனை வடக்கு பிரதேச செயலக ஏற்பாட்டில் மரநடுகை முன்னெடுப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக சுற்றாடல் தினத்தை சிறப்பிக்கும் முகமாக "நிலம் மறுசீரமைப்பு வறட்சியை தாங்கும் தன்மை" எனும் தொனிப்பொருளில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மரம் நடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மண்முன் வடக்கு பிரதேச செயலகம், மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களம், சமுர்த்தித் திணைக்களம் என்பன இணைந்து ஒழுங்குசெய்திருந்த உலக சுற்றாடல் தின நிகழ்வின்போது பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் இருதயபுரம் கிழக்கு மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள வளாகத்தில் பயன்தரும் மரங்கள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, சிவில் பொலிஸ் ஒருங்கிணைப்பாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம நிர்வாக உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.



# என்று மாறும் கையேந்தும் நிலை?

## அதிகரிக்கும் சிறுவர் யாசகர்களின் எண்ணிக்கை ஏற்படுத்தும் ஏக்கம்!



விக்னேஷ்வரன் கௌஷல்யா ஜீவனி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சன நெருக்கம் அதிகமாக இருக்கும் நகர்ப்புறங்களில் நடந்து சென்றால் அதிகளவான காட்சிகளையும் நிகழ்வுகளையும் காணக்கூடியதாக இருக்கும். இன்று மிக அதிகமாகக் காணுகின்ற காட்சிகளில் ஒன்றுதான் யாசகம் பெறுபவர்களின் காட்சி.

வழமையாக நான் சென்று வரும் பாதையிலும் சரி, பேருந்திலும் சரி - அடிக்கடி ஒரு தாய் தன் குழந்தையுடன் யாசகம் பெற்றுக் கொண்டிருப்பார். அதனைப் பார்க்கும்போது ஒரு பக்கம் பரிதாபமாக இருக்கும் அதேவேளை இந்த உச்சிவெயிலின் அகோரத்திலும் அந்தப் பிஞ்சுக் குழந்தையை சுமந்து கொண்டு வெயிலில் அலைந்து திரிந்து யாசகம் பெற வேண்டுமா? என்ற கேள்வி மனதில் எழத்தான் செய்கின்றது. அதையும் தாண்டி அப்பெண் தனதும் தன் குழந்தையினதும் வயிற்றுப் பசிக்கா



கத்தானே இத்தனை துன்பங்களை அனுபவிக்கிறாள், என்று எண்ணி பெருமூச்சு விடத்தான் முடியும் எம்மால்.

கடந்த சில தினங்களாகவே நாம் அதிகமாக வெகுசன ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் பரவலாகப் பேசப்பட்டு வரும் விடயத்தினை கேட்டும் பார்த்தும் கொண்டிருக்கின்றோம். அதுதான், அண்மைக்காலமாக எமது நாட்டில் அதிகரித்து வரும் யாசகர்களின் எண்ணிக்கை. ஆம், இன்று இச்செய்திதான் பரவலாக அனைத்து ஊடகங்களிலும் பேசப்பட்டு வருகின்றது.

யாசகர்களின் எண்ணிக்கையில் மாற்றம் என்பதை தாண்டி குழந்தை யாசகர்களின் எண்ணிக்கையே இன்று 30,000 த்திற்கும் அதிகமாக காணப்படுவதாக ஆய்வின் முடிவுகள் கூறுகின்றன.

புனித தலங்கள், சன நெரிசல் அதிகமாக காணப்படும் இடங்களில் சிறு பிள்ளைகள் அதிகளவில் யாசகம் பெற்று வருகின்றமை அனைவராலும் கண்காணிக்கப்பட்ட விடயமாகவே காணப்படுகின்றது. இத்தகைய குழந்தை யாசகர்களுக்கு அவர்களின் பெற்றோர்களே உறுதுணையாக இருக்கின்றனர் என்பது கவலைக்குரிய விடயமாகும்.





இலங்கையில் சிறுவர்களின் சமகால நிலைமைகள் குறித்து நோக்கினால் அதிருப்தியான வெளிப்பாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றன. மேலும், அவர்கள் பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுத்து வருவதனையும் அவதானிக்க கூடியதாகவே உள்ளது.

இன்றைய சிறார்கள் நாட்டின் நாளைய தலைவர்கள் ஆவர். நாளைய நாட்டினை கட்டி எழுப்பும் மிகப் பெரும் பொறுப்பு அவர்களின் கையிலேயே உள்ளது. சிறந்த சமூக உருவாக்கம் தொடர்பில் கவனம் செலுத்துகின்ற போது சிறுவர்களின் அபிவிருத்தி மற்றும் நலன்கள் தொடர்பில் அதீத கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மென்மையான உள்ளத்தினையும் உடலினையும் கொண்ட சிறார்கள் இன்று பல்வேறு இன்னல்களுக்கும் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். எமது நாட்டில் மட்டுமின்றி ஏனைய உலக நாடுகளிலும் இத்தகைய அவல நிலை தொடர்கின்றமை வருத்தத்தையே தருகின்றது.

போர் நடவடிக்கைகளினால் அதிகளவான சிறுவர்கள் சிக்குண்டு உயிரிழக்கும் அவல நிலைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இலங்கையில் கொரோனாவுக்கு பிந்திய காலகட்டமானது சிறுவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை மேலும் அதிகப்படுத்தி உள்ளது.

இதன் அடிப்படையில் கடந்த வருடத்தின் முதல் அரையாண்டில் 2.9 மில்லியனுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் அத்தியாவசிய மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றனர்.

இலங்கை கட்டாயக் கல்விச் சட்டத்தினை அமல்படுத்தி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு வழியமைத்துள்ளது. எனினும் மாணவர்கள் கல்வியினை தொடர்வதில் தடைகள் பலவற்றையும் எதிர்கொள்கின்றனர். சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துதல், யாசகம் பெற வைத்தல், நகர்ப்புற செல்வந்தர்களின் வீட்டுக்கு வேலைக்கு அமர்த்துதல் என சிறார்களின் நிலை மிகவும் மோசமாக காணப்படுகின்றது.

பல சமூகப் பொருளாதார சமத்துவமின்மையாலும் போதியளவு கல்வி வசதியின்மையாலும் உருவாக்கப்பட்ட வறுமை நிலையே சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவதற்கும் யாசகம் பெற வைப்பதற்கும் காரணமாக அமைகின்றது என ஆய்வுகள் கூறுகின்றன. எது எப்படி இருந்தாலும் பெற்றோர்கள் தமது சம்மதத்துடன் தனது பிள்ளைகளை யாசகம் பெற அனுப்பி வைப்பது ஆச்சரியமாகவும் அதேவேளை கவலையினைத் தரக்கூடியதாகவும் அமைகின்றது.

கதிர்காமம் போன்ற புனித தலங்களை தரிசிக்கும் காலகட்டத்தில் அவ்வளாகத்தைச் சுற்றிலும் அதிகளவான யாசகம் பெறும் குழந்தைகளை காணக்கூடியதாக இருக்கும். இவர்களின் பின்புலத்தை விசாரித்தால், தனது குடும்பத்தினருடன் இணைந்தே இத்தகைய தொழிலை அவர்கள் புரிகின்றனர் என்கின்ற ஆச்சரியமான, கசப்பான உண்மையும் வெளிவரும்.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை நோக்கினால், அங்கு தன் மனைவி மற்றும் குழந்தையினை யாசகம் பெறுவதற்கு அனுப்பி விட்டு அதில் வரும் பணத்தினைக் கொண்டு, ஓர் ஆண் தனக்கு பிடித்தாற்போல உணவுகளை உண்டு மகிழ்வதனை காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறான சம்பவங்களைப் பார்க்கும்போது பொறுப்பில்லாத ஆண்களின் செயலினாலும் பெற்றோர்களின் செயல்பாட்டினாலும்தான் இவ்வாறான கசப்பான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்பதை தெளிவாக கூற முடியும்.

கதிர்காமம், செல்லக் கதிர்காமம் ஆலயங்கள் மற்றும் கிரிவெஹர விகாரை போன்ற சன நெருக்கம் அதிகம் உள்ள இடங்களில் சிறுவர்கள் யாசகம் பெற்று வருகின்றனர். இவர்கள் தனியாகவும் சிலர் பெற்றோருடனும் நின்று யாசகம் பெற்று வருகின்றனர்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# மஹ்மூத் மகளிர் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.எம். அப்துல் நசார் ஓய்வு பெற்றார்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக ஆசிரியராக கடமையற்றி ஓய்வு நிலையினையடைந்த எம்.எம்.எம். அப்துல் நசார் அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் கல்லூரியின் சேர் றாசீக் பரீட் மண்டபத்தில் இடம் பெற்றது.

சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.எம். அப்துல் நசார் 1988 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் சேவையில் இணைந்ததிலிருந்து சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம், சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைகளில் கடமையாற்றியதுடன் 1994ஆம் ஆண்டு தொடக்கம் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் ஆங்கிலப் பாட ஆசிரியராக தன்னை இணைத்துக்கொண்டார் .

சுமார் 28 ஆண்டுகள் இக்கல்லூரிக்கு சேவை யாற்றியதுடன் கடந்த 3ஆம் திகதியுடன் இலங்கை ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

அவருக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வில் அதிபர், பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் ஒய்வு பெற்ற அப்துல் நசார் ஆசிரியர் பற்றிய நினைவு உரைகள் மற்றும் வரலாற்று நினைவலைகளை சபையினர் மத்தியில் பகிர்ந்து கொண்டனர்.

ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.எம். அப்துல் நசார், மஹ்மூத் மகளிர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக, கல்லூரியின் முகாமைத்துவ குழு உறுப்பினராக, ஒழுக்காற்றுச் சபைக் குழு உறுப்பினராக, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினராக, ஆசிரியராக, வகுப்பாசிரியராக, சிறந்த அலுவலக நிர்வாகியாகவும் செயற்பட்டதுடன் முன்னாள் அதிபர் ஏ.எச்.எம். பஷீர் காலத்தில் ஆரம்பம் செய்யப்பட்ட இரு மொழிப் பிரிவையும் கல்லூரியின் ஆங்கில பாடத்தையும் வளர்ச்சியடையச் செய்வதில் முக்கிய பாத்திரத்தை வகித்தவர்.

பாடசாலை வளர்ச்சி, ஆங்கில மொழி, ஒழுக்கம், முகாமைத்துவ அபிவிருத்தியில் தன்னை முழுமையாக அற்பணித்து பல அதிபர்களுடன் சேவையாற்றிய ஓர் சிறந்த ஆசானை வாழ்த்தி பாராட்டி கௌரவிப்பதில் பாடசாலை சமூகம் பெருமிதம் கொள்கின்றது, என்று நிகழ்வில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டனர்.

ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சேவை நலன் பாராட்டு விழா நிகழ்வுகளை சங்க செயலாளர் ஆசிரியர் முஸ்தபா ஹக்கீம் தொகுத்து வழங்கினர். சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.எம். அப்துல் நசாருடைய 36 வருட கால ஆசிரியர் சேவையினை பாராட்டி பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டதுடன் ஆசிரியர் நலன்புரிச் சங்கம் சார்பான நினைவுப் பரிசினை அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் வழங்கி வைத்தார்.

தரம் 6 தொடக்கம் 13 வரையான பகுதித்தலைவர்கள் இதனுடன் தொடர்பான ஆசிரியர்கள் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் ஹாஜியானி எஸ்.எஸ்.எம். மசூது லெவ்வை, உதவி அதிபர் என்.டி. நதீகா, பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசார ஊழியர்கள், ஒய்வு பெற்ற ஆசிரியரின் மனைவி, பிள்ளைகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்கள்



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு, மூதூர் கோட்டத்தில் உள்ள பாட்டாளிபுரம், நீலாங்கேணி, இளக்கந்தை, நல்லூர் ஆகிய பின்தங்கிய ஊர்களில் அமைந்துள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொருவருக்கும் ஆற்றல் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் நேற்று (06) திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டன.

இந்நூல்களை திருகோணமலை மாவட்ட நலன் புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன், பொருளா ளர் இராசரத்தினம் கோகுலதாசன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இதில் ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# மார்க்ஸ்மேன் விளையாட்டு கழகத்திற்கு புதிய சீருடை



(எஸ். சினீஸ் கான்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மார்க்ஸ்மேன் விளையாட்டுக் கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் றிஷாட் ஏ காதர் தலைமையில் தனியார் விடுதியில் இடம்பெற்ற இந் நிகழ்வுக்கு கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கடந்த காலங்களில் இப்பிராந்தியத்தில் விளையாட்டுக் கழகங்களின் வளர்ச்சியில் பல்வேறுபட்ட ஆலோசனைகளை வழங்கிய ஓய்வு பெற்ற மாவட்ட மெய்வ வல்லுநர் பயிற்றுவிப்பாளர் எஸ். எல்.தாஜுதீனின் சேவையினைப் பாராட்டியும், பிரதம அதிதி அம்பாறை மாவட்டத்தில் விளையாட்டு கழகங்களுக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்காகவும், சமூக சேவைக்காகவும் கழகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# சம்பந்தனும் சுமந்திரனும் தமிழினத் துரோகிகள்!

## வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும் என்று மொட்டு எம்.பி. வலியுறுத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களான இரா.சம்பந்தனும், எம்.ஏ. சுமந்திரனும் தமிழினத்துக்குத் துரோகம் செய்தவர்கள் என்று மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப் பல தடவைகள் முன்வந்தபோது சம்பந்தனும், சுமந்திரனுமே அதனைக் குழப்பியடித்தார்கள். அவர்கள் இருவரும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுபவர்கள்.

வெளிநாடுகளிடம் நிதியைப் பெற்றுக்கொண்டு தமிழினத்துக்குத் துரோகம் செய்த அவர்கள் இருவருக்கும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும். அவர்களின் கட்சியும்



அந்தத் தேர்தலில் படுதோல்வியடைய வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டுக் கட்சியே வெற்றியடையும். எனவே, தமிழ் மக்கள் எமது கட்சியின் பின்னால் அணிதிரள வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நாம் தீர்வு வழங்குவோம்” - என்றார். (05)

# சுதந்திரக் கட்சியின் தலைமையிலான புதிய கூட்டணியின் அங்குரார்ப்பண பேரணி நாளை அம்பாந்தோட்டையில் ஆரம்பம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள புதிய கூட்டணியின் அங்குரார்ப்பண பேரணி நாளை (8) பிற்பகல் 2.00 மணிக்கு ஹம்பாந்தோட்டை நகரில் நடைபெறவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் அமைச்சருமான மகிந்த அமரவீரவின் பூரண தலைமைத்துவத்தின் கீழ் இந்த பேரணியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சுதந்திர கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்றத்தில் சுயாதீன குழுவாக இயங்குகின்ற எம்.பி.க்கள் இந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

புதிய கூட்டணியின் ஆரம்பத்துடன் அடுத்த கட்டமாக மேலும் பல கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளை இணைத்து பரந்தளவிலான கூட்டணியொன்று கட்டியெழுப்பப்படும் என நாடாளுமன்றமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்தார்.

நிமல் சிறிபால டி சில்வா, லசந்த அழகியவன்ன, துமிந்த திஸாநாயக்க, சுசில் பிரேம்ஜயந்த, நளீன் பெர்னாண்டோ, அனுர பிரியதர்ஷன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன ஆகிய எம்பிக்களுடன் மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான தொழிற்சங்கங்கள் உட்பட சிவில் அமைப்புகளும் இந்த கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ரென-18)

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காலி சிறைச்சாலைக் கைதி தப்பியோட்டம்!

காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த காலி சிறைச்சாலை கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

32 வயதுடைய நபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் காலி சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இவர் வைத்தியசாலையின் கழிவறையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர் சிறைச்சாலை அதிகாரிகளிடம் கழிவறைக்குச் செல்ல வேண்டும் எனக் கூறியுள்ளார். கழிவறைக்குச் செல்வதற்காகக் கை விலங்குகளை அகற்றிய சிறைச்சாலை அதிகாரிகள், பாதுகாப்புக்காகக் கழிவறைக்கு முன்பாகக் காத்திருந்தனர். எனினும், அவர் கழிவறையிலிருந்து பாய்ந்து தப்பிச் சென்றுள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)

# என்று மாறும் ....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் யாசகம் கேட்கும் போது பாடப்புத்தகம் மற்றும் கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்ய வேண்டும் என்பதனை காரணம் காட்டி வருகின்றனர் என்பது காவல்துறையினரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காவல்துறையினர் அவர்களைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போதிலும் சிறுவர்களின் பெற்றோர்களினால் பொலிஸ் நிலையத்திலிருந்து அழைத்து வரப்பட்டு மீண்டும் யாசகம் பெறும் தொழிலையே மேற்கொள்ள வைக்கப்பட்டுள்ளனர்.

இங்கு தவறு பெற்றோர்களின் மீதுதான் காணப்படுகின்றது என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும். இத்தகைய செயல்களுக்கு தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்காத பட்சத்தில் போதைப்பொருள் விற்பனை, திருட்டு, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற பல குற்றச் செயல்பாடுகள் அதிகரிக்கும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

4 வயது தொடக்கம் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களே இன்று அதிக அளவில் யாசகத்திற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். ஒன்றும் அறியாத சிறுவர்களின் எதிர்காலத்தினை அவர்களது பெற்றோர்களே தவறான வழியில் வழிநடத்திச் செல்கின்றனர் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

ஒவ்வொருவரது வாழ்விலும் சிறுபராயம் என்பது மிகவும் முக்கியமான ஒரு பருவமாக விளங்குகின்றது. இந்நிலையில் அப்படி சுதந்திரமாக சிறுவர்கள் செயலாற்றுவதற்கு இடம் அளிக்க வேண்டும்.

அத்துமீறிய தலையீடுகளாலும் அதிகரித்த எதிர்பார்ப்புகளினாலும் சிறுவர்களின் இயல்பு நிலையைப் பாழ்படுத்துவது பாரதூரமான குற்றமாகும். இத்தகைய குற்றம் இழைப்பவர்கள் மற்றும் அதற்கு உறுதுணையாக இருப்பவர்களுக்கு தகுந்த தண்டனைகளை வழங்கினால் மாத்திரமே இவை சிறிதேனும் குறைவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

எமது நாட்டில் இதற்கான சட்ட திட்டங்கள் வெகுவிரைவில் ஏற்பாடு செய்யப்பட்டு, இத்தகைய அசாதாரண நிலையினை மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டியது எம் அனைவரினதும் தலையாய கடமை ஆகும்.

நாளைய சமுதாயமான இன்றைய சிறார்களை தவறான வழியில் வழிநடத்தாமல், சரியான வெற்றிப் பாதைக்கு வழிவகுத்து செல்ல அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியம்.

எதிர்காலத்தைக் கொடுக்கவேண்டிய பிஞ்சுகளின் கைகளில் யாசகத்தட்டைக் கொடுக்காதீர்கள்!








## யாழ்.போதனாவுக்கு இதயத்தின் அதிர்வு கண்காணிப்பு இயந்திரம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் பயன்பாட்டிற்காக, இதய அதிர்வு கண்காணிப்பு இயந்திரம் (Eco Machine) ஒன்று இலங்கைக்கான கனேடிய உயர்தானிகரால் இன்று கையளிக்கப்பட்டது.

போதானா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சி மண்டபத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது

இதன்போது கனடா செந்தில் குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் குறித்த இயந்திரம் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப் பட்டது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ் தானிகர் எரிக் வால்ஸ் கலந்து கொண்டு வைத்திய உதவிப் பொருட்களைக் கையளித்திருந்தார். (01)

## சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவு நிலையம் நடாத்திய உரிமையாளருக்கு தண்டம்!

யாழ்ப்பாணம் ஏழாலைப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் உணவு கையாளும் நிலையத்தினை நடாத்திய உரிமையாருக்கு 15 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த நீதிமன்று, உரிமையாளரை கடுமையாக எச்சரித்து விடுவித்துள்ளது

ஏழாலைப் பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகரால் முன்னெடுக்கப்பட்ட திடீர் பரிசோதனையில் சுகாதாரமற்ற முறையில், சுகாதாரச் சீர்கேட்டுடன் உணவு கையாளும் நிலையம் இயங்கி வந்த நிலையில், அதன் உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

குறித்த வழக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மன்றில் முன்னிலையான உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, 15 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மன்று, உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்து விடுவித்தது.

அதேவேளை கடந்த வாரம் சுன்னாகம் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையம் ஒன்றில் காலாவதியான மற்றும் உடல் நலத்திற்கு தீங்கு ஏற்படுத்தக்கூடிய, உண்பதற்கு ஒவ்வாத உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக உரிமையாளருக்கு 83 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (01)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.06.2024 இல் வெளியிடப்பெற்றது.